செ. வெ. எண்: 15 நாள்: 09.05.2018

ந.க.ஜி1/ 5722/2018

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்,
கரூர்.
நாள் 08.05.20118

**பத்திரிக்கைச் செய்தி**

கரூர் மாவட்டத்தில் 1427 –ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) 18.05.2018, 22.05.2018, 23.05.2018, 24.05.2018, 25.05.2018, 29.05.2018 மற்றும் 31.05.2018 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரவக்குறிச்சி வட்டத்திலும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் குளித்தலை வட்டத்திலும், உதவி ஆணையர் (கலால்) அவர்கள் கரூர் வட்டத்திலும், தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி) அவர்கள் கிருஷ்ணராயபுரம் வட்டத்திலும், கரூர் வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள் மண்மங்கலம் வட்டத்திலும், குளித்தலை வருவாய்க் கோட்டாட்சியர் அவர்கள் கடவூர் வட்டத்திலும், அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் வருவாய்த் தீர்வாயத்தினை நடத்துகிறார்கள். பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை சம்மந்தப்பட்ட வருவாய்த் தீர்வாய அலுவலர்களிடம் விண்ணப்பித்து தீர்வு கண்டுகொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துக் கொள்கிறார்.

08.05.18
மாவட்ட ஆட்சித்தலைவர்
கரூர்.

08/5/18

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.